**//மிகஅவசரம் // தனிக்கவனம்தேவை//**

சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள். சென்னை-08

ந.க.எண்.7980 /அ6/2022 நாள். 28 .11. 2022

**பொருள்** பள்ளிக்கல்வி- விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் - 2022-23 ஆம் கல்வியாண்டு – 11 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து இன மாணவ /மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குவதற்கு இறுதி தேவைப்பட்டியல் கோருதல் – சார்பாக.

**பார்வை** சென்னை06பள்ளிக்கல்விஆணையரகஇணைஇயக்குநர்(தொழிற்கல்வி அவர்களின்செயல்முறைகள்ந.க.எண்.040736/இ/இ1/2022, நாள்.17.11.2022

தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் சென்னை மாவட்ட அளவில் அனைத்து அரசு/ சென்னை / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் மேல்நிலைப் பாடப்பிரிவு வகுப்புகளில் 11 ம் வகுப்பு பயிலும் அனைத்து இன மாணவ / மாணவியர்களுக்கும் (SC/ST/MBC&DNC/BC/OC) (பள்ளியுடன் இணைந்துள்ள விடுதிகளில் ( Residential Schools ) தங்கியுள்ளோர் மற்றும் பள்ளியும் விடுதியும் ஒரே வளாகத்தில் அமைந்துள்ள (Schools and Hostels are in the same campus) விடுதியில் தங்கியுள்ளோர் ஆகிய மாணாக்கர்களை தவிர்த்து), விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் 2021-2022 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற மாணாக்கர்களுக்கு மிதிவண்டி வழங்கிய விவரத்தையும் (Excel Sheet படிவம்) மற்றும் 2022-2023 ஆம் கல்வியாண்டில் பள்ளிக்கல்வி ஆணையரகத்தின் கீழ் இயங்கும் அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் மேல்நிலைப் பாடப்பிரிவு வகுப்புகளில் 11 ம் வகுப்பு பயிலும் அனைத்து இன மாணாக்கர்களுக்கும் விலையில்லா மிதிவண்டி வழங்குவதற்கான இறுதி தேவைப்பட்டியல் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ள Excel Sheet –இல் 29.11.2022 மாலை 5.00 மணிக்குள் தவறு ஏதுமின்றி பூர்த்தி செய்து ,முதன்மைக்கல்வி அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விட்டு மேலும் தலைமை ஆசிரியரின் கையொப்பமிட்ட ஒரு பிரதி நேரிடையாக தனிநபர் மூலம் சென்னை முதன்மை கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு, சார்ந்த பள்ளித்தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், 2022-2023 ஆம் கல்வியாண்டிற்கு இறுதி தேவைப்பட்டியல் அளிக்கும் போது, கூடுதல் இருப்பு மற்றும் குறைவான எண்ணிக்கை ,ஏற்படாத வண்ணம் பள்ளித்தலைமை ஆசிரியர்கள் இப்பொருள் குறித்து தனிகவனம் செலுத்தி அனுப்பி வைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**இணைப்பு:**

1.2021-2022 ( 3 படிவங்கள் Excel Sheet)

2. 2022-2023 (2. படிவங்கள் Excel Sheet)

ஓம்./...

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

**பெறுநர்**

தலைமை ஆசிரியர்கள் .அரசு/ சென்னை / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகள் ,சென்னை மாவட்டம்

**நகல்**

தென் சென்னை(இடைநிலை) மற்றும் வட சென்னை (இடைநிலை) மாவட்ட க்கல்வி அலுவலர்கள் தகவலுக்காக அனுப்படுகிறது.